REGISTERED AS A NEWSPAPER பக்கங்கள் 02

விசேட பதிப்பு விலை ரூபா 3.50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

கடற்புலிகளின் வீரத்தை பாடும் இரு ஒலிப்பதிவு நாடா வெளியீடு

தமிழீழக் கடற்பரப்பெங்கும் புதிய வரலாறு எழுதி, உலகத்தின் புருவங்களை உயரவைத்து தமிழனை தலைநிமிரச் செய்யும் கடற்புலிகளின் வீரத்தையும் ஈகத்தையும் வரிகளாக எழுதி இசையாக வடித்தெடுத்த இரண்டு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களான ★கடற்கரும்புலிகள், ★கடலின் மடியில் ஆகியன விரைவில் வெளிவரவுள்ளன. கடற்புலிகளின் வெளியீடாக கலை பண்பாட்டுக் கழகத்தின் உருவாக்கத்தில் உங்கள் செவிகளுக்குள் தேனள்ளி வார்த்து சிந்தையில் தீமூட்டும் பாடல்களின் தொகுப்புக்கள் (2ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 22 | 08-11-94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 263

# படையிறக்கும் போர்க் கப்பல் பாரிய சேதம்;

# கடற் கரும்புலிகளின் துணிகரத் தாக்குதல்

## வெற்றிலைக்கேணி கரையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**வெற்றிலைக்கேணி கடற்கரையோரத்தில் கடற்கரும் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'படைகள் தரையிறக்கும் போர்க்கப்பல்' லாண்டிங் கிறாப்- ஒன்றுபாரிய சேதத்திற்கு உள்ளாகியது. இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் சிறிலங்கா கடற்படையினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது**

இன்று அதிகாலை 12.26 மணிக்கு கடற்கரும்புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு ஆயுத தளபாடங்களை கரையோரத்தில் வைத்து இறக்கிக் கொண்டிருக்கும்போதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள இத் தரையிறங்கும் பகுதிக்குள் வெற்றிகரமாக ஊடுருவி முன்னேறிய கடற்கரும்புலி இவ் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்தார்,

இக்கப்பலானது கரையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை தாக்கப்பட்டமையினால் கப்பல் பலத்த சேதத்திற்கு உள்ளாகியபோதும் முற்றாக நீரினுள் அமிழும் சாத்தியம் குறைவாகவே உள்ளதெனத் தெரியவருகின்றது;

கடந்த ஒருமாதகாலப் பகுதிக்குள் இப்பகுதியில் கடற்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை இன்று அதிகாலை இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலின்போது சிறிலங்கா கடற்படை மற்றும் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இருப்பினும் இது குறித்த தெளிவான தகவல்கள் வெளிவரவில்லை,



வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் இராணுவத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த சிறிலங்காவின் தரையிறக்கும் போர்க்கப்பலைத் தாக்கி வீரசாதனை படைத்த கடற்கரும்புலி மேஜர் வித்தி, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

## கடற் கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

இன்று அதிகாலை இடம்பெற்ற தரையிறக்கும் போர்க் கப்பல் மீதான தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் வித்தி (சந்தனம் யோகேஸ்வரன், குடாரப்பு, நாகர்கோவில்) வீரச்சாவடைந்தார்.

வெடிப்பொருள்கள் ஏற்றிய படகில் ஊடுருவிச் சென்று கப்பலின் மீது இவர் மோதினார்;

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச்

இன்று அதிகாலை 12.26 மணிக்கு கடற்கரும்புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு ஆயுத தளபாடங்களை கரையோரத்தில் வைத்து இறக்கிக் கொண்டிருக்கும்போதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள இத்தரையிறங்கும் பகுதிக்குள் வெற்றிகரமாக ஊடுருவி முன்னேறிய கடற்கரும்புலி இவ் வெற்றிகரமான தாக்குதலை நடத்தி முடித்தார்,

இக்கப்பலானது கரையில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை தாக்கப்பட்டமையினால் கப்பல் பலத்த சேதத்திற்கு உள்ளாகியபோதும் முற்றாக நீரினுள் அமிழும் சாத்தியம் குறைவாகவே உள்ளதெனத் தெரியவருகின்றது;

கடந்த ஒருமாதகாலப் பகுதிக்குள் இப்பகுதியில் கடற்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை இன்று அதிகாலை இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலின்போது சிறிலங்கா கடற்படை மற்றும் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இருப்பினும் இது குறித்த தெளிவான தகவல்கள் வெளிவரவில்லை,



வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் இராணுவத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த சிறிலங்காவின் தரையிறக்கும் போர்க்கப்பலைத் தாக்கி வீரசாதனை படைத்த கடற்கரும்புலி மேஜர் வித்தி, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் நிற்பதை படத்தில் காணலாம்;

# கடற் கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

இன்று அதிகாலை இடம்பெற்ற தரையிறக்கும் போர்க் கப்பல் மீதான தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் வித்தி (சந்தனம் யோகேஸ்வரன், குடாரப்பு, நாகர்கோவில்) வீரச்சாவடைந்தார்

வெடிப்பொருள்கள் ஏற்றிய படகில் ஊடுருவிச் சென்று கப்பலின் மீது இவர் மோதினார்;

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

# 3 மணி கடும் சமரின் பின் கப்பலை புலிகள் தாக்கினர்

## சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

வடக்கு கரையோரத்தில் புலிகள், கடற்படையின் தரை இறக்கும் கப்பலொன்றை மூன்று மணி நேர துப்பாக்கிச் சமரின் பின் தாக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

மூன்று சிப்பாய்களும், ஒரு மாலுமியும் இச் சம்பவத்தில் காயமடைந்ததாகவும், விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் எதிர்த்தாக்குதல்களை நடத்தியதாகவும் அது மேலும் தெரிவித்தது.

# காவலுக்கு நின்ற டோறாக்கள் கடற்புலிகளால் விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தரையிறக்கும் போர்க் கப்பலுக்கு காவல் காத்து நின்ற 'டோறா' படகுகள் மீது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்; கடற்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத டோறா படகுகள் விரைந்தோடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன;

நேற்று அதிகாலை 12,25 மணிக்கு வெற்றிலைக்கேணி டடையினருக்கான தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த போர்க்கப்பல் மீது கடற்கரும்புலிகள் வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்டதை அடுத்து இம்மோதல் ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்பரப்பில் காவல்நின்ற டோறா படகுகளுக்கும் கடற்புலிகள் அணியினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது: இறுதியில் கடற்புலிகளால் டோறாப் படகுகள் விரட்டியடிக்கப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது:


## தரையிறக்கும்போர்க்கப்பல் பற்றிய விபரம்

வெற்றிலைக்கேணியில் கடற்கரும்புலித் தாக்குதலுக்குள்ளான சிறிலங்கா கடற்படையின் தரையிறக்கும் போர்க் கப்பல் பற்றிய விபரங்கள்:

★ கப்பலின் நீளம் - 108 அடி (33 மீற்றர்)
★ அகலம் - 26 அடி (8 மீற்றர்]
★ வேகம் - 8 கடல்மைல்/மணி
★ வீச்சு - 1800 கடல்மைல்
★ நிறை - 268 தொன்
★ கப்பலில் ஒரு சமயத்தில் பணியாற்றுபவர்கள்-12 பேர்
★ ஒரே தடவையில் 600 துருப்புக்களை ஏற்றிச் செல்லும் அல்லது நான்கு கவச வாகனங்களை கொண்டு செல்லக்கூடியது:
★ இரண்டு கட்டபிளர் டீசல் என்ஜின்களை கொண்டது
★ ஒவ்வொரு என்ஜினினதும் வலு - 1524 குதிரைவலு

[மறு பக்கம் பார்க்க]

# சிறிலங்கா கடற்படை தரையிறக்கும் கப்பல்



இன்று வெற்றிலைக்கேணி கரையில் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான சிறிலங்கா கடற்படையினரின் தரையிறக்கும் கப்பலை மேலுள்ள படத்தில் காணலாம்.

# காமினி கொலையை பயன்படுத்தி இனவாதத்தை தூண்ட முயற்சி

## அமைச்சர் பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவின் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை தவிர்க்கும் நோக்கமோ அதற்கு இடையூறு செய்யும் நோக்கமோ கிடையாது என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்த விசாரணைகளை நடத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சகல உதவிகளையும் வழங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கிராண்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இந்திய நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை கடந்த வியாழன் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் கையளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சில சக்திகள் காமினி திசாநாயக்காவின் கொலையை சாதகமாகப் பயன்படுத்தி வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டும் முகமாக தவறான தகவல்களை பரப்பி வருவதாகத் தெரிவித்தார். இது முற்றிலும் தவறான ஓர் செயலாகும் என அவர் கூறினார்

ஜனாதிபதி தேர்தலை நீதியாகவும் அமைதியாகவும் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கும் வேளையில் இந்த வதந்தி பரப்புவோரின் செயல்கள் குறித்து அரசாங்கம் கவலை கொண்டிருப்பதாக தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

### பொலிசாரிடம் பதிவு

தேர்தல் பாதுகாப்பிற்கென 40 ஆயிரம் பொலிஸ்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்திலிருந்து நேற்றுமுன்தினம் மாலை வரை 1112 முறைப்பாடுகள் பொலிசாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதில் பொ ஐ முன்னணியினர் செய்த முறைப்பாடுகள் 520ம் ஐ.தே.க, வினர் செய்த முறைப்பாடுகள் 537 ஆகும். ஏனைய கட்சியினர் முறைப்பாடுகள் 55 ஆகும் இனிமேல் தேர்தல் வன்முறைகள் உச்சக்கட்டத்தை அடையலாம் என்றும் பாதுகாப்பு படையினர் உசார்படுத்தப் பட்டுள்ளனர் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

### காயமடைந்த 63பேர் விசாரணை

(கொழும்பு)
பாலத்துறை குண்டு வெடிப்பில் காயமடைந்தோர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டுவருகின்றனர்- இதுவரையில் சுமார் 63 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பில் காயமடைந்த ஏனையோர் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஹபறணவில் வவுச்சர்

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''ஹபறண'' கப்பலில் செயலகத்திற்கு 165 மெ, தொன் சீனியும் சுகாதாரப் பகுதியினரிற்கு மின்பிறப்பாக்கி ஒன்றும் மலத்தியோன் மருந்தும் மற்றும் தனியாருக்கான பொருட்களும் ஒய்வூதிய வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளன. (இ. பா)

### செயன்முறை தேர்வு

தமிழீழ இள நிலைப் பொதுத் தேர்வின் விஞ்

### கூட்டம்

சண்டிலிப்பாய் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப, 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

# இருமுனைத் தாக்குதலால் மக்கள் இடம்பெயர்வு

(வடமராட்சி)
வடமராட்சி கிழக்கு குடியிருப்புகள் மீது சிறிலங்கா படையினர் இரு முனைத்தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்துமக்கள் இடம்பெயர்ந்தனர்.

கடந்த வாரமும் அப்பகுதிகள் மீது வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடைபெற்ற போதும் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்; மீதியாக இருந்த மக்களும் தமது கையில் கிடைத்த பொருள்களுடன் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்ததை காண முடிந்தது.

இத்தாக்குதல் சம்பவங்களையடுத்து அப்பகுதிப் பாடசாலைகளில் மாணவர்கள் வரவும் குறைவாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது அப்பகுதி மக்கள் மத்தியில் பீதி நிலை காணப்பட்டது எனினும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் இல்லை. (யோ)

# வடமராட்சி கிழக்குகுடியிருப்புகள் மீது விமானப்படை அகோர தாக்குதல்

(வடமராட்சி)
வடமராட்சி கிழக்கு மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் இன்று அகோரத் தாக்குதலை மேற்கொண்டன.

வெற்றிலைக்கேணி கடற் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரின் லாண்டிங்கிறாப் மீது கடற்கரும்புலிகள் தாக்குதல் செய்ததையடுத்து குடியிருப்புகள் மீது பலத்த தாக்குதல்கள் நடைபெற்றன.

உடுத்துறை, தாளையடி. வேம்படி பகுதிக் குடியிருப்புகள் மீதுகடும் தாக்குதல்நடைபெற்றது. இப்பகுதிக்கு வந்த இரண்டு பொம்பர்கள், ஒரு அவ்ரோ, உலங்குவா னூர்தி என்பன இக்குடியிருப்புகள் மீது மாறி மாறி தாக்கின; ஒரு மணிக்கு வந்த விமானங்கள் தொடர்ந்து காலை 4.00 மணி வரை கண் மூடித்தனமாக தாக்கின.

அதேவேளை வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்தும் பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தாளையடிக்கும் வேம்படிக்கும் இடையிலேயே குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன. (யோ)

# கடற்புலிக் கொமாண்டோக்கள் யாழ். கடற்பிரதேசத்தில் தாக்கலாம்

## சண்டே ஒப்சேவர் தெரிவிப்பு

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கொமாண்டோக்கள் யாழ்ப்பாணத்தில் கடற்பிரதேசத்தில் தாக்குதல் ஒன்றை நடத்த தயாராகி வருவதாக கடந்த ஞாயிறு சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் பாதுகாப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ.பி.டி.பியின் நடமாட்டங்களுள்ள தீவுப் பகுதிகளில் புலிகளின் படகுகளின் நடமாட்டங்கள் அதிகரித்து வருவதால் இப்பகுதியில் தாக்குதல் நடைபெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேகம் குறைந்த போர்க் கப்பல்களால் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது

சாகரவர்த்தனா போன்ற யுத்தக்கப்பலை விட மூன்று மடங்கு வேகத்தில் செயற்படக்கூடிய படகுகள் விடுதலைப் புலிகளிடம் உண்டு. எனவே எத்தகைய கனரக ஆயுதங்களை இத்தகைய கப்பல்கள் கொண்டிருந்த போதும் கடற்புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது. இவ்வாறு சண்டே ரைம்சின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐந்துவாரங்களுக்கு முன்பு மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா கப்பலை விடப்பெரியதும் சக்தி வாய்ந்ததுமான இரு கப்பல்கள் ரஷ்யாவிடமிருந்து 73 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டுள்ளன. ஆனால் சாகரவர்த்தனா மேல் நடத்தப்பட்ட தாக்குதல் பெரிய, வேகம் குறைந்த கப்பல்கள் விடுதலைப் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவை என நிரூபிக்கப்பட்டது. இந் நிலையில் மேலும் ஏன் பெரியகப்பல்கள் வாங்கப்படுகின்றன என இராணுவ வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளன எனவும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கடற்புலிகளின்

இரண்டும் விரைவில் உங்களின் கைகளில் கிட்டும் என விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அறியத்தருகின்றனர்.



# தாம் நியமித்த கிராம சேவகர்களை நிரந்தரமாக்குமாறு ஈ. பி. டி. பி. வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)
தீவுப் பகுதியில் ஈ பி.டி பி, யினரால் நியமிக்கப்பட்டுள்ள 13 கிராம சேவகர்களை நிரந்தரமாக்குமாறு அமைச்சரிடம் ஈ. பி. டி. பியினர் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; தீவகத்தில் தங்களால் நியமிக்கப்பட்டவர்கள் கஷ்டநிலைமைகளில் பணியாற்றியவர்கள் இவர்களை நிறுத்தி புதியவர்களை நியமிக்கக் கூடாது.

தீவுப்பகுதியில் கிராம சேவகர் பதவிக்கான உச்சபட்ச வரையறை 66 இருப்பதாகவும் இவற்றில் வெற்றிடமாக உள்ள அனைத்தையும் பூர்த்தி செய்யும்படி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் கோரியுள்ளது.

இவ்வெற்றிடம் அனைத்தும் பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கிராமசேவகர்களிற்கு சந்தர்ப்பம் கிடைக்க வாய்ப்பு ஏற்படலாம் என தெரியவருகிறது. (இ) (பா)

# குண்டுவெடிப்பு விசாரணை பாரபட்சமற்று நடைபெறுகிறது

## காமினியின் குடும்ப வக்கீல்

(கொழும்பு)
கிராண்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பான புலனாய்வு விசாரணைகள்பாரபட்சமற்ற முறையில் நடைபெற்று வருவதாக காலஞ்சென்ற காமினி [illegible] செய்தியாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூர் புலன் விசாரணை உத்தியோகத்தர்கள் கிராண்பாஸ் சம்பவம் நடைபெற்ற இடத்தை துல்லியமான முறை [illegible] சாட்டுப்பற்றி வெளிநாட்டு நிருபர் ஒருவர் வினவிய போது பதிலளித்த திரு. தயா பெரேரா ஜனாப் முகமட் ஒரு அரசியல்வாதி என்றும் இந்தக் கொலையில் அரசாங் [illegible]

### இருவார உலர் உணவு

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் மூலம் 1994 புரட்டாதி மாத முதல் இரு வாரத்திற்குரிய இலவச உலர் உணவு விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும், இவ் விநியோகத்தினை எதிர்வரும்

தகவல்கள் திரட்டப்பட்டுவரு வதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

## ஹபறணவில் வவுச்சர்


பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''ஹபறண'' கப்பலில் செயலகத்திற்கு 165 மெ. தொன் சீனியும் சுகாதாரப் பகுதியினரிற்கு மின்பிறப்பாக்கி ஒன்றும் மலத்தியோன் மருந்தும் மற்றும் தனியாருக்கான பொருட்களும் ஒய்வூதிய வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளன. (இ. பா)

## செயன்முறை தேர்வு

தமிழீழ இள நிலைப் பொதுத் தேர்வின் விஞ்ஞானச் செய்முறைக்கான அறிவுறுத்தல், பொருட் பட்டியல், வினாத்தாள்கள் ஆகியவை இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணிக்கு தமது கல்விக் கோட்டத்தில் அதிபர்கள் பெற்று விஞ்ஞான ஆசிரியர்களின் உதவியுடன் தேர்வினைத் திட்டமிட்டவாறு நடாத்தி ஒத்துழைக்குமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

...லைப் புலிகளிடம் உண்டு. எனவே எத்தகைய கனரக ஆயுதங்களை இத்தகைய ...

...சண்டே ரைம்சின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.



கடந்த மாதம் 9-ம் திகதி வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட இராணுவ விநியோகக் கப்பல் ஒஷியன் ரேட் மூழ்கிக் கொண்டிருப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

...ததுமான இரு கப்பல்கள் ரஷ்யாவிடமிருந்து 73 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்டுள்ளன. ஆனால் சாகரவர்த்தனா மேல் நடத்தப்பட்ட தாக்குதல் பெரிய, வேகம் ...

மேலும் ஏன் பெரியகப்பல்கள் வாங்கப்படுகின்றன என இராணுவ வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளன எனவும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; தீவகத்தில் தங்களால் நியமிக்கப்பட்டவர்கள் கஷ்டநிலைமைகளில் பணியாற்றியவர்கள் இவர்களை நிறுத்தி புதியவர்களை ...

...யுள்ளது. இவ்வெற்றிடம் அனைத்தும் பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கிராமசேவகர்களிற்கு சந்தர்ப்பம் கிடைக்க வாய்ப்பு ஏற்படலாம் என தெரியவருகிறது. (இ) (பா)

# குண்டுவெடிப்பு விசாரணை பாரபட்சமற்று நடைபெறுகிறது

## காமினியின் குடும்ப வக்கீல்

(கொழும்பு)

கிராண்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பான புலனாய்வு விசாரணைகள்பாரபட்சமற்ற முறையில் நடைபெற்று வருவதாக காலம்சென்ற காமினி திசாநாயக்கவின் குடும்பத்தைப் பிரதி நிதித்துவம்செய்யும் பிரபல வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

திரு. திசாநாயக்கவின் குடும்பத்தின் சார்பில் பொலிசாருடன் தொடர்பு வைத்துச் செயல்படும் ஜனாதிபதி வழக்கறிஞர் தயா பெரேரா கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூர் புலன் விசாரணை உத்தியோகத்தர்கள் கிராண்பாஸ் சம்பவம் நடைபெற்ற இடத்தை துல்லியமானமுறையில் பரிசோதனை செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்,

காமினியின் படுகொலை விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான ஒரு சதி வேலையாகும் என்று முன்னாள் சபாநாயகர் எம் ஏச். முகமட் தெரிவித்த குற்றச்சாட்டுப்பற்றி வெளிநாட்டு நிருபர் ஒருவர் வினவிய போது பதிலளித்த திரு. தயா பெரேரா ஜனாப் முகமட் ஒரு அரசியல்வாதி என்றும் இந்தக் கொலையில் அரசாங்கத்துக்கு எதுவித பங்கும் இல்லை என்பது தனது கருத்தாகும் எனவும்தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தியாவைச் சேர்ந்த இரு நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் அக்கறை காட்டாமல் இருந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

விசாரணைகளின் உள்ளூர் புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவுவதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் பெயர்களைக் குறிப்பிடுமாறு அரசாங்கம் திரு. காமினி திசாநாயக்கவின் குடும்பத்தைக் கேட்டிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்-

## இருவார உலர் உணவு

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் கிளைகள் மூலம் 1994 புரட்டாதி மாத முதல் இரு வாரத்திற்குரிய இலவச உலர் உணவு விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும், இவ் விநியோகத்தினை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பாவனையாளர்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## குளத்தில் மூழ்கி மரணம்

கந்தரோடை குளத்தில் நீச்சலடித்துக்கொண்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தின்போது அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பிரான்சிஸ் பிறேமநாதன் (வயது 20) என்னும் இளைஞரே மரணமானவராவார் (சி)

# தினமும்காலை8 00மணிக்கு வீடுவீடாக் சோதனை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் காலை 8 மணிக்கு ஒவ்வொரு நாளும் சகல வீடுகளும் இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன-

மண்டைதீவில் 1991-ம் ஆண்டு இராணுவ பிடியில் சிக்கிக் கொண்ட வயோதிபர் ஒருவர் தற்பொழுது தமது குடும்பத்தினரிடம் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ளார் அவரே இவ்வாறு எமது நிருபரிடம் தெரிவித்தார்.

# வொய்ஸ்ஒவ் அமெரிக்காவிற்குஎதிராக அமெ. தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

இரணவில பகுதியில் வொய்ஸ் ஒவ் அமெரிக்க நிலையம்நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அருகே எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்தினர்

மேற்படி நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் மகஜர் ஒன்றை அமெரிக்கதூதுவரிடம் கையளித்தனர் இந்த நிலையம் அமைப்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர் இதனால் மீனவ குடும்பங்கள்பல சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர வேண்டியிருக்கும்-

அமெரிக்காவிடமிருந்துமுன்றாவது உலகநாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல்களும் பிரச்சினைகளும் எதிர்நோக்கபடுவதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது-

## தரையிறக்கும்

★ இரண்டு புரொப்பலர்களைக் கொண்டது.

★ கொண்டிருக்கும் ஆயுதங்கள்
20 மி மீ ஒலிகன் பீரங்கி - 2
12.7 மிமீ சீனத்தயாரிப்பு விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் - 2

★ சிங்கப்பூர் செஸ்பா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது

★ கப்பலின் பெறுமதி -12 கோடிரூபா

★ ஆழ்கடலில் 1. 5 மீற்றர் அமிழ்ந்து செல்லும் இக்கப்பல் தரையிறக்கும்போது இரண்டு அடி தண்ணீரிலும் மிதக்கக்கூடியது

★ 1983-ம் ஆண்டு சிங்கப்பூர் நிறுவனத்தால் சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது

★ இக்கப்பல் முல்லைத்தீவு, பூநகரி வெற்றிலைக்கேணி என பல இடங்களில்சிறிலங்கா படையினரையும் வாகனங்களையும் தரையிறக்க பயன்பட்டது

★ 9-10-1992இல் கற்பிட்டிக் கடலில் மூழ்கிய கந்துல தரையிறக்கும் கப்பலின் இனத்தைச் சேர்ந்தது

# காமினியின் கொலையுடன் வெளிநாட்டு சக்திகள் தொடர்பு

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் கொலையின் பின்னணியில் நாட்டில் செயல்படும் வெளிநாட்டு சக்திகள் இருப்பதாக தற்போது நடைபெறும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என 'இறு' எனும் சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது-

காமினி திசாநாயக்கா கொலை சிறிலங்காவில் செயல்படும் வெளிநாட்டு இரகசிய புலனாய்வு பிரிவு மூலம் செயற்படுத்தப்பட்டு இருக்கலாம் என்றும் விசாரணைகளை திசைதிருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என நம்பப்படுவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெகவித்துள்ளது-

இவ் இரகசிய புலனாய்வு சேவையுடன் காமினி திசாநாயக்கா அண்மைக் காலம் வரை நல்ல தொடர்புகளை வைத்திருந்தார் என்றும் இதன்பின்னர் இவ்வமைப்பு இவரின் அரசியல் நடவடிக்கை தொடர்பாக தடை விதிக்கப்பட்டதாகவும் இதன்பின்னரே இக்கொலை நடைபெற்றதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது-

இதே வேளை இக்கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனக் காட்ட அவ் அமைப்பு முயற்சி மேற்கொண்டதாகவும் இதற்காகவே குண்டு வெடித்த இடத்தில் சயனைட் வில்லை திட்டமிட்டு போட்டதாகவும் அது தெரிவித்துள்ளது-

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# பயணிகள் கப்பல் சேவை இரு மாதங்கள் தடைப்படும்?

(வடமராட்சி)

திருகோணமலை பருத்தித்துறைக்கான 'நரோமா' கப்பல் பயணிகள் சேவை அடுத்த மாதம் முதல் இரண்டு மாதங்களுக்கு இடை நிறுத்தப்படவுள்ளன.

சீரற்ற கால நிலையை யடுத்து மார்கழி மாதம் முதல் மாசி மாதம் வரை இதன் சேவை தடைப்படவுள்ளது இப் பயணிகள் கப்பல் இம் மாதம் 14, 21 ஆம் திகதியுடன் தனது போக்குவரத்துச் சேவையை நிறுத்திக்கொள்ளும் கால நிலை மேலும் சீரற்றுப்போகுமானால் 21ஆம் திகதி கப்பல் சேவை தடைப்படலாமெனவும் நம்பப்படுகிறது

நோயாளிகளை ஏற்றி வரும் பினம்பயன் கப்பலின் சேவையும் இடை நிறுத்தப்படலாமென எதிர்பார்க்கப் படுகிறது ஆனாலும் அது பற்றிய முடிவுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என தெரியவருகிறது.

திருகோணமலைப் பகுதியில் காற்று மழை அதிகமாக இருந்ததினால் நேற்று பருத்தித்துறைக்கு வந்த இக் கப்பல் இரண்டு மணிநேரம் தாமதித்தே வந்து சேர்ந்தது

# தற்கொலைப் படையாளி ஐ.தே.க தீவிர ஆதரவாளர்

(கொழும்பு)

பாலத்துறைக் குண்டுவெடிப்பினை நடத்திய பெண் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தீவிர ஆதரவாளராக இருந்தவர் என்று கூறப்படுகிறது, காமினியும் பிரேமச்சந்திராவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த பின்னர் ஐ. தே. கவின் தீவிர ஆதரவாளராக இவர் மாறினார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.